# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது

இல. 7,994 — 1933 ம் ௵ ஆடி௴ 28 ந் திகதி, வெள்ளிக்கிழமை.

## Part IV.—நான்காம் பாகம்.

---

### அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் முத்துவ விளையாட்டு மைதான என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 80. குறிச்சி—முத்துவ-இரத்தினபுரி நகரசபை எல்லைக்குள் முத்துவ.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 12E | கெலஉடபட்டியேவத்த .. | தோட்டம் .. | ஜே. எம். ஒளிவோ .. | .. 0 0 9·8 |
| 12F | ஷை .. | ஷை .. | ஷை .. | .. 0 0 21·3 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1933 ம் ௵ ஆவணி௴ 21 ந் தேதியிலன்று முற்பகல் 10 மணிக்கு இரத்தினபுரி கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

இரத்தினபுரிக் கச்சேரி,
1933 ம் ௵ ஆடி௴ 2 ந் உ.

என். ஜே. லடிங்ரன்,
சப்பிரகாம மாகாண அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பலாங்கொடை ஆஸ்பத்திரிக்குத் தேவையான என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 6. குறிச்சி—எல்லேஅருவ.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 11 | தாம்பேவத்த அல்லது மாவிகா தென்ன | மயானம் .. | பான்ஸ் ரத்வத்தே குமாரிகாமியும் மறுபேரும் | 0 0 15 |
| 12 | ஷை .. | ஷை .. | ஷை .. | .. 0 0 20·7 |
| 13 | தாம்பேவத்த .. | தோட்டம் .. | ஷை .. | .. 0 0 8·1 |
| 16 | தென்னபிட்டவத்த .. | ஷை .. | ஷை .. | .. 0 0 14·6 |
| 19 | ஷை .. | ஷை .. | ஷை .. | .. 0 0 16·1 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1933 ம் ௵ ஆவணி மாசம் 25 ந் தேதியிலன்று முற்பகல் 10 மணிக்கு பலாங்கொடை கமான் வங்களாவில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின் படுகின்றது.

இரத்தினபுரிக் கச்சேரி,
1933 ம் ௵ ஆடி௴ 20 ந் உ.

என். ஜே. லடிங்ரன்,
சப்பிரகாம மாகாண அரசாட்சி ஏசண்டு.

293——J. N. 30832—120 (7/33)

T 1

### 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்
நொம்பர் 531 (குருணாக்கல்).

இதனோடிணைந்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதற்றிற்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சேர்ந்தைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1933 ம் ஆண்டு (ஜூலை) ஆடிமீ 28 ந் தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற் கைபொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1933 ம் ௵ (மே) வைகாசிமீ 24 ந் தேதியிலன்று குருநாக்கல் கச்சேரியில கொடுக்கப்பட்டது.

ஸி. ஹறிசன் ஜோன்ஸ்,
வடமேல் மாகாண அரசாட்சி ஏஜன்ற்.

குறிப்பு.—(*a*) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் வடமேல் மாகாண அரசாட்சி ஏஜன்ற அவர்களிடமும் அவைகளின் அளவைப் படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக் கொள்ளலாம்.

(*b*) இக்காணிகளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அவ்வக காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

அட்டவணை.

கீழ்சொல்லப்படுங் காணித்துண்டுகள் வடமேல் மாகாணத்தில் குருநாக்கல் டிஸ்திறிக்கில் வாயுடவிலிகற்பத்துவில் மகாகல்பொடமெகொட கோறளை வடக்கில் பனவெல்லேகம கிராமத்திலிருக்கின்றன:—

I.—பிரதமபடத்து இல. 6,744.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. | | |
|---|---|---|---|---|
| 1 | பனவெல்லேகம மூக்கலான .. | 13 | 1 | 10 |
| 2 | எகெலகொல்லெயாயெமடகல்லறலகெவுவன .. | 8 | 1 | 19 |
| 3 | மடகல்லே முலகேதம்புற .. | 2 | 1 | 3 |
| | | 23 | 3 | 32 |

எல்லை:—வடக்கு-கல்வெகறகம கிராம எல்லை;

கிழக்கு-கெற்றுவான் ஆறு;

தெற்கு-கறம்ஜீபாயும் மறுவும் உருத்தாடும் எகலகொல்லேஏன்யாயவும், கறம்ஜீபாயும் மறுவும் உருத்தாடும் டியுல்கக அத்தறபுகும்புறவும், கறம்ஜ்பாயும் மறுவும் உருத்தாடும் ஹீறசகலகவாஏன்யாயவும்;

மேற்கு-கறஜீபாயும் மறுவும் உருத்தாடும் வாபொடகும்புறவும், கறம்ஜீபாயும் மறுவும் உருத்தாடும் எகலகொல்லேவன்யாயவும், பொகஹபெலசாவிலிருந்து நெலுன்பத்கமவுக்குப்போகும் ரோட்டும்.

II.—பிரதமபடத்து இல. 6,744.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. | | |
|---|---|---|---|---|
| 4 | எஹெலகொல்லேஏன்யாய (குளக்கட்டோரத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ளது) | 0 | 1 | 0 |
| 5 | பனவெல்லேகமவாவ .. .. | 1 | 3 | 27 |
| 7 | பனவெல்லேகமவாவ .. .. | 0 | 2 | 27 |
| 8 | வாபொடகும்புறேபில்லாவஏன (குளக்கட்டோரத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ளது) .. .. | 0 | 0 | 34 |
| | | 3 | 0 | 8 |

எல்லை:—வடக்கு-கறம்ஜீபாயும் மறுவும் ஈருத்தாடும் வவஇஸ்மத்தேஏன;

கிழக்கு-கறம்ஜீபாயும் மறுவும் உருத்தாடும் எகெலகொல்லேஏன்யாயவும், கறம்ஜீபாயும் மறுவும் உருத்தாடும் வாபொடேகும்புறவும்;

தெற்கு-கறம்ஜீடாயும் மறுவும் உருத்தாடும் கெதறகாவகும்புறேபில்லாவவும், முடி உருத்தாடும் கெதறகவகும்புற எனப்படும் 6,744 ம் இலக்கப் பிரதமப்படத்தின் 6 ம் இலக்கத் துண்டும்;

மேற்கு-கறம்ஜீபாயும் மறுவும் உருத்தாடும் கெதறகாவகும்புறவும், கறம்ஜீபாயும் மறுவும் உருத்தாடும் வவஇஸ்மத்தேஏனவும்.

### 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்
நி. 532 (குருணாக்கல்).

இதனோடிணைந்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதற்கேனும் அதன் எப்பங்குககேனும் அதில் எச்சோந்தைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1933 ம் ௵ (ஜூலை) ஆடிமீ 28 ந் தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற கைபொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச்சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1933 ம் ௵ (மே) வைகாசிமீ 24 ந் தேதியிலன்று குருநாக்கல் கச்சேரியில் கொடுக்கப்பட்டது.

ஸி. ஹறிசன் ஜோன்ஸ்,
வடமேல் மாகாண அரசாட்சி ஏஜன்ற்.

குறிப்பு.—(*a*) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் வடமேல் மாகாண அரசாட்சி ஏஜன்ற் அவர்களிடமும், அவைகளின் அளவைப்படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும பெற்றுக் கொள்ளலாம்.

(*b*) இக்காணிகளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அவ்வக் காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

அட்டவணை.

கீழ் சொல்லப்படும் காணித்துண்டு வடமேல் மாகாணத்தில், குருநாக்கல் டிஸ்திறிக்கில், வாயுடவிலிகற்பத்துவில் குடாகல்பொட கோறளையில் கெலவ கிராமத்தில் இருக்கிறது:—

பிரதமபடத்து இல. 6,804.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. | | |
|---|---|---|---|---|
| 1 | கல்கடுல்லகவகேன, கெலம்பகஹாமுல கேனவும் மல்லெமெண்டியகேனவும் .. | 14 | 1 | 16 |

எல்லை: வடக்கே-முடி உரித்தாடும் அதாவெற்றிச்சகேன; கிழக்கே-முடி. உரித்தாடும் யக்தெசகண்ட; தெற்கே-முடி உரித்தாடும் கல்கடுல்லெகேன அல்லது மல்லெமெண்டியகேன எனப்படும் 6,229 ம் இலக்க பிரதம படத்தின் 1A ம் இலக்கத் துண்டு (பிம்புறுவெலகம கிராமத்தினெல்லை); மேற்கே-கொனகமத்திலிருந்து கலகெதறவுக்குப் போகும் ரோட்டு.

---

## கேள்விப் பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல்கள்.

இத்தாலறிவிப்பது வடமாகாண ஏசண்டர் அல்லது உதவி ஏசண்டரால் யாழ்ப்பாணக் கச்சேரியில் பின்னூற் செரல்லப்படும் துறை ஆயக்குத்தகைகளை 1933 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1 ந் திகதி தொடக்கமாகப் பன்னிரண்டு மாதத்துக்கு விலைக்கு வாங்குவதற்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்கள் 1933 ம் ஆண்டு ஆவணி மாதம் 21 ந் திகதி திங்கட்கிழமை மத்தியானம் 12 மணியளவில் ஏற்கப்படும்.

1. பண்ணைத்துறை. 2. அராலித்துறை. 3. காரைதீவு.

மேற்சொல்லிய ஒவ்வொரு குத்தகைக்கும் வெவ்வேறு கேள்விப்பத்திரம் அனுப்பப்பட வேண்டும். பத்திரங்கள் கேள்விக்காரரால் நேரே கொடுபடவேண்டும். தபால் வழியாய் அனுப்பப்பட்டவையுங் குறித்த நேரம் தேதியின்பின் கிடைப்பவையுங் கவனிக்கப்படா.

ஒப்புக்கொள்ளப்படும் கேள்விக்காரன் கேள்வித்தொகையிற் பத்திலொன்று காசாய் உடனே கட்டவேண்டும். உத்தம தேசாதிபதியவர்களால் கேள்வி ஏற்கப்பட்டால் கேள்விக்காரன் தனக்கு அதைப்பற்றிய அறிவித்தல் கிடைத்த 20 நாட்களுள் அரைவாசித் தொகைக்கு அனுமதி பெற்ற ஆதனப் பிணையேனும் காசாய் கேள்வித் தொகையில் மூன்றிலொரு பங்கு பிணையேனுங் கட்டவேண்டும்.

கவண்மேர்து ஏசன்றர் விற்பனவிலன்று தீர்மானிக்கிற பிரகாரம் பாதைகளைப் பழுதுபார்ப்பதற்கு வேண்டிய பணத்தைப் பிணையாகக் கேள்விக்காரன் கட்டவும் வேண்டும்.

முடிக்குரிய தரணை பிணையாகக் கொடுபடும் உறுதி முதலியவைகளைப் பரிசோதிப்பதற்கும் ஒப்பந்த உறுதி போடுவதற்கும் உரிய செலவு ஆதனங்களை விலைமதித்தல் முதலியவைகளால் வரும் செலவும் பிணை உறுதிக்கு ஒட்டவேண்டிய முத்திரைச் செலவும் கேள்விக்காரன் கட்டவேண்டும்.

பிணையாகக் கொடுபடும் உறுதிகளிலுள்ள ஆதனங்கள் ஈடு முதலியவைகட் குட்படவில்லையென்று கேள்விக்காரன் தன் செலவில் நிலப்பதிவு கந்தோரிலிருந்து ஓர் பத்திரம் பெற்றுக்கொடுக்கவேண்டும்.

யாழ்ப்பாண ஏசண்டரிடம் தேவையான மேலதிகமான விபரங்கள் பெற்றுக்கொள்ளலாம். போதிய கேள்விகள் கேட்கப்படாத குத்தகைகள் கேள்விப்பத்திரங்கள் திறந்து பரிசோதிக்கப்பட்டவுடன் அன்றையத்தினமே பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

பீ. மோட்டிமர்,
கவுண்மேந்து ஏசன்றுக்காக.

யாழ்ப்பாணக் கச்சேரி,
1933 ம் ஆண்டு ஆடிமீ 20 ந் திகதி.

---

## சாமான்கள் கொடுக்கிறதற்குக் கேள்விப்பத்திரம்.

நார்க்கடகம், ஓலைப்பாய், ஓலைஉமல், பனைஓலை, என்னும் இந்தச் சாமான்கள் கேட்குநேரமே யாழ்ப்பாணம் உப்புமால் சிவியாதெரு உப்பளம் தொண்டமனூர் உப்புக்குதம் ஆகிய இந்த விடங்களில் கொடுக்கிறதற்கு 1933 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 1 ந் திகதி தொடக்கம் 1934 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 30 ந் திகதி வரையில் ஒப்பந்தம் கேட்க விரும்புபவருடைய கேள்விப்பத்திரம் ஏற்கப்படும்.

2. கேள்விப்பத்திரம் இணைப்பிரதியாகவும் முத்திரையிடப்பட்டதாயு மிருக்கவேண்டும். மூலப்பிரதி வடமாகாண ஏசண்றுத்துரை அவர்களுக்கும் இணைப்பிரதி கொழும்பு அரசிறை உப்பு ஆலோசனைகர்த்தருக்கு விலாசம் போட்டிருத்தல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரம் கேள்விக்காரன் தானுகக் கொடுக்கலாம் அல்லது தபாலில் அனுப்பலாம். இரண்டு பிரதிகளும் ஒரே நேரத்தில் அனுப்பப்படல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரத்தில் "Tender for Supplying Materials, 1933–1934 என்று உறையின் இடதுபக்க மேல் மூலையில் போடப்பட்டிருத்தல் வேண்டும். அப்பத்திரம் யாழ்ப்பாணக் கச்சேரியில் 1933 ம் ஆண்டு ஆவணி மாதம் 28 ந் திகதி பிற்பகல் 2 மணிக்குமுன் சேரவேண்டும்.

5. கேள்விப்பத்திரம் எழுத மாதிரிகடதாசி யாழ்ப்பாணக் கச்சேரியில் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம். அந்த மாதிரிக் கடதாசியில் எழுதாத வேறு எவ்வித பத்திரமும் ஏற்கப்பட மாட்டாது. மாற்றங்களுக்கு கையொப்ப முதலெழுத்துக விடப்பட வேண்டும். அல்லாவிடில் கேள்விப்பத்திரம் பிழையென விலக்கப்படும்.

6. கச்சேரியில் ரூபா 20 கட்டிப் பற்றுச்சீட்டு காட்டினவருக்கே மாதிரிக்கடுதாசி கொடுபடும். ஒருவருடைய ஒப்பந்தக் கேள்வியை ஏற்றுக்கொண்டதென்று அறிவித்தல் கொடுத்த நாள தொடக்கம் பத்து நாளைக்குள் ஒப்பந்தம் ஏற்க பிணைகொடுக்க அல்லது உறுதிமுடிக்கத் தவறினல், கட்டின காசு கவண்மேந்துக்கு இரையாகும். அப்படித் தவறியவர் கவுண்மேந்து ஒப்பந்தம் கொடுக்கப்படாதென்று விலக்கப்பட்ட ஒப்பந்தகாரருடைய பெயர் பதியப்படும் இடாப்பில் பதியப்படுகிறதற்காளாவர் ஒப்பந்தம் கைச்சாத்திட்டுமுடிவானவுடன் மற்றக் கேள்விக்காரருடைய காசு திருப்பிக்கொடுபடும்.

7. ஒவ்வொரு கேள்விப் பத்திரத்தோடு இரண்டு தகுதியானபேர் பிணை நிற்போமென்று சம்மதம் காட்டும் பத்திரமும் அணைத்திருக்க வேண்டும். அவர்களுடைய மேல் விலாசமும் காட்டியிருக்க வேண்டும்.

8. ஒப்பந்தம் கொடுக்கும் நாளில் கொடுக்கவேண்டிய சாமான்களுக்கு மாதிரிப் பொருட்களும் கொடுக்கவேண்டும்.

9. ஒப்பந்தத்தைச் சரியாய் ஒப்பேற்றுவதற்காகப் போதிய பிணைகாரர் பிணையுறுதிக்குச் சேரவேணும். பிணையுறுதியின் தொகையும் வேறுவித தேவையான விபரங்களும் கந்தோரில் கேட்டுக்கொள்ளலாம்.

10. அரசாட்சியாரிடம் ஒப்பந்தம் எடுத்து அவ்வொப்பந்தத்தை நிறைவேற்றத் தவறியவர்களுடைய டாப்பில் தனித்தேனும் மற்றவர்களுடன் ஒருமித்தேனும் காணப்படும் பேர்வழிகாரருடைய ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அன்றியும் ஒப்பந்தக்காரன் அந்த இடாப்பிலுள்ளவர்களில் யாரையாவது அல்லது வடமாகாண அரசாட்சி ஏசன்றர் தமக்குப் போதியதெனக் கண்ட நியாயங்களை எழுத்தில் கொடுத்துத் தடைநொத்தீசு கொடுப்பின் அப்படித் தடைசெய்யப்பட்டவரைத் தம் ஊழியத்தில் உபயோகிக்கப்படாது.

11. மேற் சொல்லப்பட்ட பிரமாணங்களுக்கு அமையாத யாதொரு கேள்விப் பத்திரமும் கவனிக்கப்பட மாட்டாது.

12. எந்தக் கேள்விப் பத்திரத்தையும் அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்க அல்லது நியாயஞ் சொல்லாது மறுக்க முழு உருத்தும் கவுண்மேந்துக்கு உண்டு.

பீ. மோட்டிமர்,
அரசாட்சி ஏசன்றுக்காக.

யாழ்ப்பாணக் கச்சேரி,
1933 ம் ஹூ ஆடிமீ 25 ந் திகதி.

---

## நகர டிஸ்திறிக்சங்க அங்கத்தவரைத் தெரிவுசெய்தல்.

### நீர்கொழும்பு நகரசங்கத் தெரிவு, 1933.

நீர்கொழும்பு நகரசங்கத்துக்கு அங்கத்தவர்களாய் தெரிவுசெய்தற்கு தகுதி உடையவர்களின் டாப்பும் அவ்வங்கத்தவரை தெரிவுசெய்யும் தகுதி உடையவர்களின் டாப்பும் மேற்படி சங்கக் கந்தோரில் கந்தோர் நேரத்தில் பார்வைக்காய் வைக்கப்பட்டிருக்கிறது. 1933 ம் ஹூ புரட்டாதிமீ 9 ந் திகதி பகல் 10 மணிக்கு மேற்சொல்லிய கந்தோரில் மேல்மாகாண அரசாட்சி ஏசன்றர், டாப்பில் ஏதும் பெயரைச் சேர்ப்பதற்கும் அல்லது டாப்பில் சேர்க்கக் கூடாதென்பதிற்கும் உள்ள உரித்துகளை விசாரிப்பதற்கு வந்திருப்பார்.

2. 1920 ம் ஆண்டின் 11 ம் இலக்கச் சட்டத்தின் 29 (3) ம் பிரிவைக் கவனிக்கவேண்டியது. எவர் ஒருவருடைய பெயரை ஏனும் டாப்பில் பதிவுசெய்தற்கு மறுப்பு இருந்தால் அப்படிப்பட்டவருக்கு விசாரணைக்கு ஏழு நாளைக்கு முன் கீழே கையொப்பமிட்டவர் எழுத்தில் நோட்டிஸ் கொடுத்தல் வேண்டும். ஆகையால் மேற்சொல்லிய பிரிவின்படி நோட்டிஸ் கொடுப்பதற்கு அப்போர்ப்பட்ட நோட்டிஸ் 1933 ம் ஹூ ஆவணிமீ 25 ந் திகதியில் அல்லது அதற்குமுன் கீழே கையொப்பமிட்டவருக்கு கிடைத்தல் வேண்டும்.

ஆர். எம். எம். வோர்ஸ்லி,
மேல்மாகாண அரசாட்சி ஏசன்றர்.

கொழும்புக் கச்சேரி,
1933 ம் ஹூ ஆடிமீ 25 ந் திகதி.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.